**தனது அரும் புதல்வர்களுள் ஒருவரைத் தமிழ்த்தாய் இழந்துவிட்டாள்!**

# உலகெங்கும் வாழும் தமிழர்களின் பேரன்பைப் பெற்ற பேராசிரியர் சாலமன் பாப்பையா!

## மறைவு செய்தி அறிந்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!




சென்னை, செப்.13-

**தமிழறிஞரும், பட்டிமன்ற தலைவருமான முனைவர் சாலமன் பாப்பையா அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2026) இயற்கையெய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்.**

**இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், உலகெங்கும் வாழும் தமிழர்களின் பேரன்மைப் பெற்ற பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள் என்றும், தனது அரும்புதல்வர்களுள் ஒருவரை தமிழ்த்தாய் இழந்துவிட்டாள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

சிரித்த முகம் சிந்தையைக் கவரும் தமிழ் மதுரை மண்ணின் மணம் ஆகியவற்றால் உலகெங்கும் வாழும் தமிழர்களின் பேரன்பைப் பெற்ற பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரும் அடைந்தேன்.

திருக்குறளுக்கு உரை கண்டவர், புறநானூற்றுக்குப் புதிய வரிசை கண்டவர், கம்பனையும் ஆய்ந்தறிந்தவர் எனப் பண்டைத் தமிழிலக்கியத்தில் எந்த அளவுக்கு விற்பன்னராகத் திகழ்ந்தாரோ, அதே அளவுக்கு எளிய மொழியில் நகைச்சுவையாகப் பேசும் திறனும் கைவரப் பெற்றவராகப் பாப்பையா அவர்கள் திகழ்ந்தார்.

பொங்கல், புத்தாண்டு உள்ளிட்ட பண்டிகை நாட்கள் பாப்பையாவின் பட்டிமன்றத்தோடுதான் தமிழர்களுக்குத் தொடங்கும் எனும் அளவுக்குத் தமிழர்களின் அன்றாட வாழ்க்கையோடு இரண்டற இயைந்துவிட்ட பெருமைக்குரியவர் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள். பட்டிமன்றம் என்றாலே பாப்பையாதான் எனக் கூறும் அளவுக்குத் தமிழ்நாடு மட்டுமல்லாது, உலகின் பல நாடுகளிலும் பல்லாயிரம் பட்டிமன்றங்களுக்கு நடுவராக இருந்தவர். தற்கால மதுரையின் பெருமைமிகு அடையாளமாகவே மாறிப் போனவர். பாப்பையா பரம்பரை எனச் சொல்லத்தக்க அளவுக்குத் தன்னைப் போலவே பல பேச்சாளர்களைத் தமிழுக்குக் கொடையாகத் தந்தவர்.

தலைவர் கலைஞர் மீதும் என் மீதும் மிகுந்த அன்பைப் பொழிந்தவர் பேராசிரியர் பாப்பையா அவர்கள். கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் எங்கள் மீது காட்டும் அன்பில் எந்த மாற்றமும் இருந்ததில்லை. எப்போது சந்தித்தாலும் புன்னகையோடும் வாஞ்சையோடும் கரங்களைப் பற்றிக்கொள்ளும் அன்பிலான உறவை நாங்கள் கொண்டிருந்தோம்.

கடந்த ஆண்டு மே மாதம் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நான் மதுரை சென்றிருந்தபோது நடந்த மக்கள் சந்திப்பில் அவரது வீட்டு வாசலுக்கு வந்து என்னை வரவேற்றார். சில மாதங்களுக்கு முன்புதான் துணைவியாரை இழந்திருந்த பேராசிரியரிடம், “உடல்நலனைப் பார்த்துக்கொள்ளுங்கள்” என்று சொல்லிவிட்டு வந்தேன். அவர் இன்று நம்மை விட்டுப் பிரிந்ததை மனம் ஏற்க மறுக்கிறது.

தனது அரும்புதல்வர்களுள் ஒருவரைத் தமிழ்த்தாய் இழந்துவிட்டாள். பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தா ர்க்கும் மதுரை மக்களுக்கும் உலகெங்கும் வாழும் அவரது இரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

**1857 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப் படிப்புக்கான இடங்கள் இந்தியா முழுவதும் நிரப்பப்படாமல் இருக்கின்றன!**

# Zero Percentile -க்குத் தகுதி மதிப்பெண்ணைக் குறைக்க வேண்டும்!

## பிரதமருக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, செப்.13-

மதிப்புமிக்க 1857 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப் படிப்புக்கான இடங்கள் இந்தியா முழுவதும் நிரப்பப்படாமல் இருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இதில் தமிழ்நாட்டில் பணிபுரியும் அரசு மருத்துவர்களுக்கான ஒதுக்கப்பட்ட 40 இடங்களும் அடங்கும். எனவே பிரதமர் அவர்கள் உடனடியாக தலையிட்டு முந்தைய ஆண்டுகளில் செய்ததைப்போல Zero Percentile-க்குத் தகுதி மதிப்பெண்ணைக் குறைக்க வேண்டும் என்றும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:-

ஒன்றிய அரசின் பொது மருத்துவச் சேவைகள் இயக்குநரகம் (DGHS) தகுதி மதிப்பெண்ணைக் குறைக்க மறுப்பதால், மதிப்புமிக்க 1,857 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப் படிப்புக்கான இடங்கள் இந்தியா முழுவதும் நிரப்பப்படாமல் இருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இதில் தமிழ்நாட்டில் பணிபுரியும் அரசு மருத்துவர்களுக்காக ஒதுக்கப்பட்ட 40 இடங்களும் அடக்கம்.

நேற்று, தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்க வழக்கில், மாண்பமை உச்சநீதிமன்றமே தகுதி மதிப்பெண்ணைக் குறைக்க அறிவுறுத்தியுள்ளது. எனவே, பிரதமர் அவர்கள் இதில் உடனடியாகத் தலையிட்டு, முந்தைய ஆண்டுகளில் செய்ததைப் போல ‘zero percentile’க்குத் தகுதி மதிப்பெண்ணைக் குறைக்க வலியுறுத்துகிறேன்.

மேலும், இடங்களை நிரப்ப இயலாமல் போகும் நிலையில், பணியில் இருக்கும் அரசு மருத்துவர்களுக்கான ஒதுக்கீட்டில் மாநில அரசுகளே அவர்களுக்கான தகுதி மதிப்பெண்ணை நிர்ணயம் செய்யவும் ஒன்றிய அரசு அனுமதிக்க வேண்டும். பொது மருத்துவம் என்பது மாநில அரசுகளின் அரசியலமைப்புக் கடமையாகும்.

மக்களுக்கு உயர்சிறப்பு மருத்துவர்களுக்கான தேவை பெரிதும் இருக்கும்போது, நம் நாட்டின் விலைமதிப்பற்ற சொத்தான மருத்துவப் படிப்புக்கான ஓர் இடம் கூட வீணாகக் கூடாது.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



மதுரையில் இயற்கை எய்திய தமிழறிஞர் பட்டிமன்ற நடுவர் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களின் உடலுக்கு தி.மு.க. சார்பில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி. மாலை அணிவித்து மரியாதை செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். உடன் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ., மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர்.

---

# சமூக வலைதளத்தில் வலம் வருகிறது!

அயோக்கியத்தனத்தின் உச்ச அரசியல் தமிழ்நாட்டில் நடைபெறுகிறது!

கடந்த இரு நாட்கள் முன்பாக ஆரம்பித்த "ஸ்டாலின் மிசா கைது" இவைகளே முக்கிய பேசுபொருளாகவும் விவாத பொருளாகவும் இருக்கின்றது.

**இதுவா இப்போது பேசு பொருள்? மின் கட்டணம் திருட்டுத்தனமாக நான்கு மடங்கு உயர்ந்து விட்டதை விவாதிக்க ஆள் இல்லை. குறுவை சாகுபடி இல்லாமல் போயாச்சு. பேச நாதியில்லை. சம்பாவுக்கு தண்ணீர் திறக்கும் ரீல்ஸ் போட ரூ.6 கோடி செலவு. அது இன்னும் கடைமடைக்கு வந்தபாடில்லை. கடுமையான விலையேற்றம். அதை பேச துப்பில்லை. பரந்தூர் விமானநிலையம் ரத்து. அதை பேச யாருக்கும் திராணி இல்லை.**

ஆனால் ஸ்டாலின் மிசாவில் கைதாகவில்லை என ஒரு விஷயம் எல்லாவற்றையும் தூக்கி முழுங்கி வருகின்றது. இது யார் பாணி அரசியல்?

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இதே விஷயத்தை ஆர்.எஸ்.எஸ். மாஃபா பாண்டியராஜன் ஆரம்பித்து வைத்த பொய் இது. அப்போது அவர் அ.தி.மு.க. இப்போது எந்த கட்சி என தெரியவில்லை?

இப்போது நான் ஒரு சினிமா உதாரணத்தை சொல்லி விடுகின்றேன்.

L.K.G என்று ஒரு திரைப்படம். ஆர்.ஜே.பாலாஜி நடித்த படம். அதிலே அவன் ஒரு கவுன்சிலர்தான்.

அந்த ஆர்.ஜே.பாலாஜிக்கு எம்.எல்.ஏ ஆக வேண்டும் என்கிற ஆசை வருகின்றது. அவன் அப்படியொன்றும் யோக்கியமான அரசியல்வாதி அல்ல. ஆனால் ஆசை யாரை விட்டது. அந்த ஊரில் ஒரு யோக்கியமான அரசியல்வாதி ஜே.கே.ரித்தீஷ். அவனுக்கும் கணிசமான வாக்கு வங்கியும், மக்கள் செல்வாக்கும் உண்டு. அங்கே அந்தக் கட்சியின் தலைவர் இறந்தமையால் இடைத்தேர்தல் வருகின்றது. ரித்தீஷ் புதிய தலைவர் ராம்குமார் சிவாஜிக்கு எதிரணி. அதனால் இந்த டுபாக்கூர் ஆர்.ஜே.பாலாஜிக்கு சீட் கிடைக்கின்றது. ரித்தீஷ் தன் சுய செல்வாக்கு காரணமாக சுயேச்சையாக நிற்கின்றான்.

இந்த நிலையில் ஆர்.ஜே.பாலாஜி ஒரு தேர்தல் வியூக கம்பெனியுடன் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு தேர்தலை சந்திக்கின்றான். அந்த கம்பெனி முதலில் ஜே.கே.ரித்தீஷின் இமேஜை பொதுமக்களிடமிருந்து காலி செய்ய திட்டம் தீட்டுகின்றது. ரித்தீஷுக்கு தேசியகீதம் பாடத் தெரியவில்லை போன்ற பல்வேறு விஷயங்களை ரீல்ஸ் போட்டு மக்களிடம் ரித்தீஷ் இமேஜை உடைக்கின்றது.

ரித்தீஷ் அதிகபட்ச பதட்டத்தால் தேர்தல் வேலையை கவனிக்க இயலாமல் தோற்றுப்போகின்றான்.

நிற்க.... இப்போ மேட்டருக்கு வருவோம். இந்த படம் வெளிவந்த பின்னர் தான் ஆர்.எஸ்.எஸ் அதே ஆயுதத்தை தமிழ்நாட்டில் கையிலெடுத்து தி.மு.க. மீது வீச முடிவு செய்கின்றது. அதை தன் நேரடி ஆர்.எஸ்.எஸ்.காரனை கொண்டு பரப்பாமல் தன் ஏஜண்டுகளை எல்லா கட்சியிலும் வைத்துள்ளதே அவனுங்களை கொண்டு பரப்ப முடிவு செய்கின்றது.

சரி அப்படிப்பார்த்தால் தி.மு.க. மீது என்ன சொல்லலாம்? நேரிடையாக அதன் தலைவர் ஸ்டாலினையே தாக்கி விடலாம் என நாக்பூர் முடிவெடுக்கின்றனர்.

சரி... ஸ்டாலினின் பலம் என்ன?

மிசாவில் உள்ளே போனது.

அதையே எடுத்துக்கொண்டனர். ஸ்டாலின் மிசாவில் எப்படி கைதானார்? எத்தனை வயதில்? எல்லாமே இணையம் முழுக்க கொட்டிக்கிடந்தன. அதையே உடைக்கும் அளவு அ.தி.மு.க.வில் இருந்த தங்கள் ஏஜெண்ட் மாஃபா பாண்டியராஜனை விட்டு ஸ்டாலின் ஜெயிலுக்கு போனது உண்மை. ஆனா மிசாவில் போகலை. பொம்பள விவகாரத்திலே உள்ளே போனார் என போகிற போக்கில் அடிச்சு விட்டுட்டு போய்விட்டான்.

அது ஒரு ரிலே ரேஸ் போலத்தான். மாஃபா கிட்டேயிருந்து அந்த குச்சி அண்ணாமலை வசம் செல்கின்றது... அடுத்தடுத்து செல்கின்றது.

தி.மு.க.வினருக்கு அதிர்ச்சி அல்ல பதட்டம் வருகின்றது. ஸ்டாலின் மிசாவில் உள்ளே போன டாக்குமெண்ட்ஸ் எல்லாவற்றையும் எம்.எம்.அப்துல்லா வெளியிடுகின்றார். பின்னர் ஒவ்வொரு தி.மு.க.வினரும் அப்துல்லா விடமிருந்து அந்த குச்சியை பிடுங்கிக்கொண்டு ரிலே ரேஸ் ஓடுகின்றனர். கிட்டத்தட்ட ஒன்னரை வருஷம் ஸ்டாலின் மிசாவில் தான் உள்ளே போனார் என நிரூபித்தனர். இதனிடையே பல கிளைக்கதைகளை அந்த ஆர்.எஸ்.எஸ் கும்பல் உருவாக்கின. ஜெயில் ஐ.ஜி வித்யாசாகரின் மகளை இவர் கெடுத்துட்டார் என்றனர். (அடேய்... சிறைத்துறைக்கு ஏதுடா ஐஜி போஸ்ட்) உடனே தி.மு.க.வினர் வித்யாசாகருக்கு பெண்ணே கிடையாது என நிரூபிக்க ஓடினர். உடனே அவர்கள் உறவுக்கார பெண் என்றார்கள். ஒரு வழியாக தி.மு.க.வினர் வித்யாசாகர் ஏன் ஜெயிலில் தி.மு.க.வினர் மீது கொலைவெறியில் இருந்தான் என கண்டுபிடித்தனர். அதாவது பச்சையப்பன் அறக்கட்டளை தேர்தலில் வித்யாசாகரின் அப்பனை தி.மு.க.வின் வெப்பன் என்.வி.என். சோமு தோற்கடித்தமையால் அதற்கு பழிவாங்கவே வித்யாசாகர் இப்படி சைக்கோவாய் மாறிவிட்டார் என கண்டுபிடித்து சொன்னார்கள்.

ஆக முழுமையாய் ஒன்னரை ஆண்டுகாலம் தி.மு.க.வினர் இதிலேயே கிடந்தனர். அந்த கேப்பிலாவது தாமரை மலர்ந்ததாயெனில் அப்பவும் தாமரை மலராது என்பதை புரிந்து கொண்டனர். தி.மு.க.வுக்கு அந்த ஒன்னரை ஆண்டுகாலம் உழைத்த பலன் என்ன தெரியுமா? அண்ணாமலை என்னும் பையன் ஒரு பொய்யன் என்பதை தி.மு.க. மக்களிடம் கொண்டு சேர்த்தது. இது தான் தி.மு.க. கண்ட பலன். எல்லாம் முடிந்தது. இதல்லாம் நடந்து இரண்டு ஆண்டுகள் ஆன பின்னே இப்போது அதே பொய்யை உசுப்பிவிட்டது யார்?

அதே ஆர்.எஸ்.எஸ்.தான்.

**எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்கின்றோம் அந்த தலைமை தற்குறியான் விஜய் நடித்துக்காட்டிய உரையை தயாரித்தது எத்தியோப்பியா மண்டையன் ஆதவ் அர்ஜுனா என்று! இல்லை நாக்பூர் வழிகாட்டுதலின் படி அதை தயாரித்தது பிறவி ஆர்.எஸ்.எஸ். காரன் நிர்மல்குமார் தான். ஆதவ் தயாரித்திருந்தால் தி.மு.க. எம்.எல்.ஏ. கருணாநிதியின் மருமகள் ஒரு வேலைக்காரப்பெண்ணை சித்திரவதை செய்ததை அந்த உரையில் எழுதியிருக்க மாட்டான். ஏனெனில் அந்த மருமகள் ஆதவின் மாமியார் லீமாரோசின் அண்ணன் மகள். ஆகவே அந்த உரையை தயாரித்தது ஆர்.எஸ்.எஸ். கும்பல். அதை தற்குறியானுக்கு டைரக்ஷன் செய்தது ஆர்.எஸ்.எஸ். காரன் நிர்மல்குமார்.**

அந்த உரையில் தான் ஸ்டாலின் அவர்கள் மீது 3 ஆண்டுகள் முன்பாக ஆர்.எஸ்.எஸ் பரப்பிய அந்த தோற்றுப்போன பொய்யை மீண்டும் திணிக்கின்றான் நிர்மல் குமார். ஸ்டாலின் மிசாவில் சிறைக்கு போகவில்லை பொம்பளை மேட்டரில் உள்ளே போனார் என எழுதித்தருகின்றான் அந்த ஆர்.எஸ்.எஸ்காரன் நிர்மல்குமார்.

தற்குறி விஜய் பயப்படுகின்றான் அதைப்படிக்க. ஆனாலும் கட்டாயப்படுத்தப்படுகின்றான் நாக்பூர் கும்பலால்.

ஆனாலும் தற்குறி அதை படிக்கும் போது "மிசாவில் நீங்க உள்ளே போன ஹூஸ்டரி தெரியும்" என பூசி மொழுகுகின்றான்.

ஐந்து வயது பையனை "தீ மிதிப்பதாக" அப்பன் வேண்டிக்கொள்வான். பையனும் கட்டாயத்தின் பேரில் மஞ்சள் உடையெல்லாம் போட்டுக்கொண்டு கையில் வேப்பிலை எடுத்துக்கொண்டு அப்பன் கையை பிடிச்சுகிட்டு வருவான். நெருப்பு கிட்டே வந்ததும் பயந்து அழுவான் அந்த பையன். ஆனால் அப்பன்காரன் ""சாமி தண்டிச்சுடும்" என பயந்து தானே அந்த சிறுவனை தூக்கிக்கொண்டு தீமிதிப்பான்.

அது போலவே முதல் நாள் தற்குறி பயந்து போய் பூசி மொழுகிய மிசா ஹிஸ்டரி விஷயத்தை அடுத்த நாள் நிர்மல்குமார் சட்டசபையில் அப்பட்டமாக ஸ்டாலின் மிசாவில் கைதாகவில்லை என சொல்லி பதிய வைக்கின்றான்.

உடனே தி.மு.க.வினர் டிடென்ஷன் ஆர்டரையும், ஜெயிலில் இருந்து ரிலீஸ் ஆன டிஸ்சார்ஜ் ஆர்டரையும், ராஜ்யசபா பேச்சுகள், ஓய்வு பெற்ற ஜெயில் அதிகாரிகளின் பேட்டிகள் என போராடுகின்றனர்.

ஆனால் தற்குறி கும்பலும் டிடென்ஷன் ஆர்டரில் ஒரு பாரா சேர்த்து AI வழியாக தயார் செய்து மல்லுக்கு நிற்கின்றனர். ஆர்.எஸ்.எஸ் நிர்மல்குமார் புன்னகைக்கின்றான்.

**தன் ஒரிஜினல் கட்சியால் முடியாததை இந்த அடிமை ஏவல் நாய்கள் கொண்டு நிறைவேற்றுவதில் தான் வெற்றி பெற்றதாக ஆர்.எஸ்.எஸ் கும்பல் மகிழ்கின்றது.**

**மதியம் 1.30 க்கு சட்டசபை முடிகின்றது. மாலை 4.00 மணிக்கு இடைத்தேர்தல் அறிவிப்பு வருகின்றது. ஆக இந்த 1 மாதகாலத்துக்கு தி.மு.க.வினரை இடைத்தேர்தல் வேலை செய்யவிடாமல் மிசா விஷயத்தில் கட்டிப்போடவே இந்த முழு நாடகமும் நடக்கின்றது.**

இதற்கெல்லாம் ஒரு முடிவே வராதா? இந்த மிசா விஷயம் மட்டும் தானா? இன்னும் பல விஷயங்கள் அப்பட்டமான பொய் பரப்புரையில் ஆர்.எஸ்.எஸ் இறங்கும். தி.மு.க.காரன் கண்ணில் ரத்தம் வர அழும் அளவுக்கு அவதூறு பரப்பும் அந்த ஆர்.எஸ்.எஸ். முன்பு அது அண்ணாமலை குரூப்பால் தன் பி.ஜே.பி. வழியாய் செய்ய நினைத்தது. ஆனால் பி.ஜே.பி. என்றாலே பொய் தான் என்கிற நேரேட்டிவில் தி.மு.க. ஜெயித்து விட்டது. அதனால் அது எடுபடாது. அதனால் இனி தற்குறியான் கட்சி வழியாக அதை ஆர்.எஸ்.எஸ் செய்யும்.

அதை தி.மு.க. எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதே மில்லியன் டாலர் கேள்வி. இதோ போராட்டம் வைத்துள்ளது தி.மு.க.

தற்குறியான் ஆட்சி வந்ததும் போதை பவுடர் அமைச்சரை நீக்கச்சொல்லி தி.மு.க. சிறை நிரப்பும் போராட்டம் அறிவித்தது. சிறைக்கும் போனோம். ரிசல்ட் என்ன? அது போலத்தான் ஆகும் நாளைய போராட்டமும்.

இதற்கு என்ன தான் முடிவு?

தி.மு.க. தலைவர் அண்ணன் ஸ்டாலின் அவர்களே உயர்நீதிமன்றத்தை நாடி "court direction" கேட்க வேண்டும்.

**"நான் இந்த தேதியில் மிசாவில் சிறைக்கு சென்றேன். அதற்கான சப்போர்டிங் டாக்குமெண்ட்ஸ் இணைத்துள்ளேன். என் மீது அவதூறாக சட்டசபையில் முதலமைச்சர் மற்றும் அமைச்சர் ஒருவரே பேசி பதியவைக்கின்றார். அதில் கோர்ட் தலையிட இயலாது என்றாலும் அந்த முதலமைச்சர் மற்றும் அமைச்சரின் அந்த பேச்சுகளால் அந்தக் கட்சியை சேர்ந்தவர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சி சேர்ந்த சிலர் மற்றும் பலர் அமைச்சர்களின் அந்த பேச்சை நம்பி என்னை சமூகவலைதளங்களில் அவதூறு செய்கின்றனர். நான் இதற்கு அவர்கள் மீது அவதூறு வழக்கு தொடுப்பதா, மானநஷ்ட வழக்கு தொடுப்பதா என்பது குறித்து ஒரு நீதிமன்ற ஆலோசனை தர வேண்டுகிறேன்" என மனுதாக்கல் செய்ய வேண்டும்.**

**உயர்நீதி மன்றம் அரசு ஆவணங்கள் சிறைத்துறை மற்றும் காவல்துறைக்கு சம்மன் அனுப்பி இவர் மிசாவில் சிறை சென்றதை உறுதி செய்த பின்னர் "நீங்கள் தனி மனுவாக போட்டு அவதூறு வழக்கு தொடுக்கலாம்" என டைரக்சன் கொடுப்பார்கள்.**

அதன் பின்னர் மற்றதை பார்த்துக்கொள்ள இயலும்.

இது ஒன்றுதான் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருக்கும் ஒரே ஆப்ஷன்!